# 22. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள்

முனைவர் ம. கீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயமுத்தூர்.

இலக்கியம் என்பது நாட்டு மக்களின் வாழ்கையைக் காட்டும் கண்ணாடி ஆகும். அந்த வகையில் கிராம மக்களின் வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும், படைப்புகளையும் குறித்த இலக்கியமே நாட்டுப்புற இலக்கியமாகும். இன்றைய உலகில் மனிதன் மிக விரைவாக முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கிறான். நாளும் புதிய புதிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறான். இருப்பினும் மனிதன் தோன்றிய காலம் முதல் இன்று வரை மக்களிடத்தில் நம்பிக்கை நிலவி வருகிறது. நம்பிக்கை என்பது இயற்கையில் ஏற்படும் மாற்றங்களுக்குச் சரியான அறிவியல் பூர்வமான காரணக்காரியங்களைக் கற்பித்தான். இதனையே நம்பிக்கை என்று கூறினர். தொடக்ககால மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்து வந்தான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. அந்நிலையில் மனித வாழக்கையில் நம்பிக்கைகள் தோன்றலாயின. உலகெங்கிலும் வாழும் பழங்குடி மக்களின் சமுதாய வரலாற்றை நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். இன்றைய உலகில் மக்களிடத்தில் நம்பிக்கை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. அவ்வகையில் நம்பிக்கைகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருமணம்

ஒரு வீட்டில் இரண்டு திருமணங்கள் ஒரே நேரத்தில் நடந்தால் ஒரு குடும்பம் சிறக்கும். ஒரு குடும்பம் தாழ்நிலை அடையும் என்பது நம்பிக்கை. நாம் வாழும் சமூகத்தில் இன்றும் இந்நிலையினை மக்கள் நம்பி வருவதைக் காணமுடிகிறது. மணமான பெண் மாப்பிளை வீட்டில் நுழையும் போது வலது காலை எடுத்து வைத்து நடக்க வேண்டும் என்றும், கணவன் வீட்டிற்கு வந்தவுடன் மணப்பெண் உப்பிலோ அல்லது நெல்லிலோ கை வைக்க வேண்டும். திருமணத்திற்குப் பின் மணப்பெண்ணை வெள்ளியன்று கணவன் வீட்டிற்கு அனுப்ப கூடாது. புதுமணத் தம்பதிகள் புதுவீட்டில் குடியேறக் கூடாது திருமணம் பற்றிய கனவு நல்லதன்று. ஆடி மாதத்தில் பெண் பார்க்க போகக் கூடாது. திருமணமான மணமக்களை மஞ்சள் கலந்த அரிசியுடன் வாழ்த்த வேண்டும். இந்நம்பிக்கைகள் அனைத்தும் இன்றும் நாம் பின் பற்றி வருவதைக் காணலாம்.

## பிள்ளைப்பேறு

தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் திருமணமானவுடன் விரைவில் தாய்மை அடைந்து விட வேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையென்றால் சமுதாயத்தின் தூற்றலுக்கு ஆளாக வேண்டும் என அஞ்சினர். குடும்பத்தின் பெயர் சொல்ல வாரிசு வேண்டும் என விரும்பினர். அதற்காகப் பெண்கள் அரசமரத்தை சுற்றி வருதல் உண்டு **அரசமரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றை பார்த்தாளாம்** என்ற பழமொழியின் மூலம் அறியலாம். அரசமர

வழிபாடு மலடடுத் தன்மையைப் போக்க வல்லது. வெள்ளிக்கிழமை விரதமிருப்பதும் பாம்புப்புற்றுக்கு பால் ஊற்றி வழிபாடு செய்வதும் பிள்ளைப் பேற்று நோன்புகளாக மக்கள் நம்பினர். குழந்தை தொப்புள் கொடி சுற்றிப் பிறத்தலை **மாலைச் சுற்றிப் பிறத்தல்** என்று கூறுவர். இவ்வாறு கொடி சுற்றிப்பிறந்தால் தாய் மாமனுக்கு ஆகாது என்னும் நம்பிக்கை இன்றும் உள்ளதைக் காணலாம். கொடி சுற்றிப் பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது என்பது நாட்டுப்புற நம்பிக்கையாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது. பிறந்த குழந்தைகளின் பிறந்த நேரத்தை வைத்தும் நம்பிக்கை கொள்வர். இதனை,

**ஆண் மூலம் அரசாளும்**
**பெண் கேட்டை கோட்டை கட்டும்**

என்ற வரிகளின் மூலம் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது. மேலும் பிறந்த நேரங்களுக்கு ஏற்ப பரிகாரமும்செய்து வந்தனர். குல தெய்வங்களுக்கு காணிக்கையும் செலுத்தி வருவதைக் காணலாம்.

## கண்ணேறு கழித்தல்

குழந்தைகளுக்கு கண்ணேறு கழித்தல் செய்வதுண்டு. சில கண்களுக்கு தீமை விளைவிக்கும் சக்தி உண்டு என நம்பினர். எனவே அத்தகையோரது கண் பட்டால் நோய் நொடி வரும் எனக் கருதினர். எனவே தான் **கல்லடி பட்டாலும் கண்ணடி படக் கூடாது** என்று கூறுவர். கண்ணேறு பட்டதைக் கழிப்பதற்காக சுண்ணாம்பும் மஞ்சளும் கொண்டு சுற்றி வீதியில் எறிவார்கள். இவ்வாறு செய்தால் கண்ணேறு கழிந்துவிடும் என மக்கள் நம்பினர் என்பதை,

**கண்ணான கண்ணார்க்கு கண்நோக்கும் வராமல்**
**சுண்ணாம்பும் மஞ்சளும் சுற்றி எறி கண்ணார்க்கு**

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. அதனை திருஷ்டி கழித்தல் என்றும் கூறுவர். புதுவீடு கட்டும் போது பூசணிக்காயில் மனித உருவமிட்டுக் கரும்புள்ளி இடுதலும், விளைந்த நிலத்தில் வைக்கோல், துணி முதலியவற்றால் உருவம் செய்து கரும்புள்ளி இடுதலும் கண்ணேறு கழித்தல் என்ற நம்பிக்கையில் செய்வதை நாம் காணமுடிகிறது.

## காது குத்துதல்

குழந்தைகளுக்கு சிறுகாயம் ஏற்படாவிட்டால் எமன் அக்குழந்தையைக் தூக்கிச் சென்று விடுவான் என்ற நம்பிக்கையின் காரணமாகக் காதுகுத்தும் வழக்கம் தமிழ்நாட்டில் தோன்றியிருக்க வேண்டும். காது குத்தும் வழக்கம் தமிழ்நாட்டில் ஆசியா, எகிப்து போன்ற மேலை நாடுகளிலும் காணப்படுகிறது. காது குத்தும் போது ஏதேனும் ஒரு உலோகத்தை அணிவிப்பர். தீமை தரும் ஆவிகள் தலை, வாய் மூக்கு, காது உறுப்புகள் வழியாக எளிதில் புகுந்து விடும் என நம்பினர். ஆகையால் காதில் துளையிட்டு தீய ஆவிகளை விரட்டும் சக்தியாகக் காதில் ஏதேனும் ஓர் உலோகத்தை அணிவித்தால் காது வழியாக தீய ஆவிகள் நுழைவதை தடுத்து விடலாம் என நம்பினர்.

## விருந்தினர்

காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்பது அக்காலம் முதல் இக்காலம் வரை தமிழர்களிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும். விருந்தினர் விளக்கு வைத்த பின்புதான் செல்ல வேண்டும். இல்லையெனில் நம் வீட்டு இலட்சுமி அவர்களோடு போய் விடும் என நம்பினர். முதன் முறையாக வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு அசைவ உணவு படைக்கக் கூடாது. ஏனென்றால் உறவு முறிந்து விடும் என நம்பினர். முதன்முதலாக விருந்தினர்கள் வியாழனன்றும், ஞாயிறு அன்றும் ஒரு வீட்டில் உண்ணக் கூடாது. விருந்தாளி வாழை இலையை உள் பக்கம் மடித்தால் திரும்ப வந்து சாப்பிடும் பாக்கியம் கிட்டும். வந்த விருந்தினர்கள் ஊர்செல்லும் போதும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது. விருந்தினர்களுக்குச் சேவல்கறி படைக்கக் கூடாது.

## வீடு

இரவில் வீடு பெருக்கினால் குப்பையை வெளியே கொட்டக்கூடாது. வடதிசை நோக்கி தலைவாசல் அமைவது நல்லது என்பர். கர்ப்பமான பெண்கள் இருக்கும் வீட்டில் குளவி கூடு கட்டும். கர்ப்பமான பெண்கள் எட்டாம் மாதம் தாய்வீடு செல்லக் கூடாது. ஐந்தாவது பெண்ணும்,ஆறாவது ஆணும் பிறந்தால் வீடு சிறப்புறும். புது வீட்டிற்குச் செல்லும் போது உப்பையும் எடுத்துச் செல்ல வேண்டும். சிவப்பு எறும்பு சாரை சாரையாக வந்தால் வீட்டிற்குக் கெட்டது. **மாடு அசைந்து தின்னும் வீடு அசையாமல் தின்னும்** என்னும் பழமொழி மக்களிடத்தில் நம்பிக்கையாகி விட்டது.

## நோய்

நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத் தாயாக விளங்குவது நாட்டுப்புற மருத்துவம் ஆகும். நாட்டுப்புற மக்கள் நாட்டுபுற மருந்தினை நம்பிக்கையின் அடிப்படையில் பயன்படுத்துகின்றனர். அம்மை நோயினை தெய்வக்குறை என நம்பி மாரியம்மனுக்கு வழிபாடு செய்து வேப்பிலையைப் பயன்படுத்துகின்றனர். இரட்டையர்கள் தடவினால் சுளுக்குப் போய் விடும் என நம்புகின்றனர். **ஆயிரம் பேரை கொன்றவன் அரை வைத்தியன்** என்ற பழமொழி

நாட்டுப்புற வைத்தியன் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. ஆயிரம் மூலிகைகளைக் கொன்றாலும் அரை வைத்தியன்தான் ஆக முடியும் என நம்புகின்றனர்.

## கனவு

அடக்கி வைக்கப்பட்ட விருப்பத்தின் மறைமுகமான வெளிப்பாடே கனவாகும். கனவுகள் நம்பிக்கைகளாகவும், வருங்காரியத்தை முன்னர் உணர்த்துவனவாகவும் இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளன. இரவில் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுவது இன்றளவும் தொடர்வதைக் காணமுடிகின்றது.

## கோலம்

கோலத்தில் இலட்சுமி இருப்பதாக நம்புகின்றனர். கோலமிடும் செம்மண்ணைத் திருமாலாகக் கருதுகின்றனர். கோலமிட்டால் கோடிச் செல்வம் பெருகும் என்று நம்புகின்றனர். உயிர்களை மீட்கும் சக்தி கோலத்திற்கு உண்டு. கோலத்தை தாண்டிப்பேய், பிசாசு வராது என நம்பிக்கை வைத்திருப்பதை அறிய முடிகின்றது.

## உணவு, ஆடை, அணிகலன்கள்

கைராசிப்படி உணவின் சுவை அமையும் என்று நம்பினர். நகத்தில் பூ வளர்ந்தால் புத்தாடை கிடைக்கும். பெண்கள் நெற்றியில் திலகம் எப்பொழுதும் இட வேண்டும். நடுவிரலில் மோதிரம் அணிவது நல்லதல்ல. திருமணப் பெண்ணிற்கு அனுப்பும் ஆடைகளில் கறுப்பு, வெள்ளை நிறங்கள் இருக்கக் கூடாது. தங்க வளையல் அணிந்தாலும் ஒரு கண்ணாடி வளையலாவது அணிந்திருக்க வேண்டும். போன்ற நம்பிக்கைகள் இன்றளவும் நிலவி வருவதைக் காணமுடிகின்றது.

## மழை

வடக்கே, தெற்கே மின்னல் தோன்றினால் மழை வரும் என நம்புகின்றனர். தட்டான் தாழப் பறந்தால் மழை வரும். கோழி சிறகை விரித்து மண்ணில் பதுங்கினால் மழை வரும். ஆடு கூடிக்கூடி அலைந்தால் மழை வரும். கழுதை இரண்டு காது தூக்கியிருந்தால் மழை வரும். நரி ஊருக்குள் வந்தால் மழை வரும். தவளை கத்தினால் மழை வரும். **அந்தி மழை அழுதாலும் விடாது** என்ற பழமொழி மழை பற்றிய நம்பிக்கைகள் மக்களிடம் இன்றும் இருப்பதைப் புலப்படுத்துகின்றது.

## காலந்தோறும் நம்பிக்கைகள்

- தும்பிக்கையானைப் பாடினால் துன்பங்கள் வாராது என்று மக்கள் நம்பினர்.
- தைப் பொங்கல் அன்று தான் வளர்க்கும் விலங்கினங்களை தெய்வமாக வழிபட்டனர்.
- தொல்காப்பியர் காலத்தில் பறவைச் சகுன நம்பிக்கை இருந்ததைக் காணமுடிகின்றது.
- கூகை அலறினால் சாவு வரும் என்று நம்பினர்.
- காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்று எண்ணினர்.
- தும்மல் வந்தால் தனக்கு வேண்டியவர்கள் நினைக்கின்றனர் என நம்பினர்.
- பூனை குறுக்கே சென்றால் தீய சகுனமாகக் கருதினர்.
- பச்சோந்தி இடமிருந்து வலம் சென்றால் நல்ல சகுனம் எனக் கருதினர்.
- பல்லி ஒலித்தலைச் சகுனமாகக் கருதுவதைச் சங்காலம் முதல் இன்று வரை தமிழர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இறந்தவர்களின் உடலினின்று பிரியும் உயிர் மறுமையில் சந்தித்துக் கொள்ளும் என்றும், உயிர் சிவலோகம், வைகுண்டம், கைலாசம் எமலோகம் செல்கிறது எனவும் நம்பிக்கை வைத்திருந்தனர். நீண்ட நெற்றியுடையவர்கள் அறிவாளிகள். ஆண்களுக்கு வலது கண் துடித்தால் நல்லது. பெண்களுக்கு இடது கண் துடித்தால் நல்லது எனவும் ஒருவர் தும்மும் போது 'நீண்டு வாழ்க', 'நூற்றாண்டு வாழ்க' என்றும் கூறினால் அது நடக்கும் எனவும் மறைவிடத்தில் மச்சம் இருந்தால் நல்லது எனவும் பல நம்பிக்கைகளைக் கையாண்டு வாழ்ந்து வந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

## தொகுப்புரை

தொல்காப்பியக் காலம் முதல் இன்று வரை மக்களிடத்தில் நம்பிக்கை நிலவி வருகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் ஒவ்வொரு வாழ்விலும், சிறு சிறு செயலிலும் கூட எத்தனையோ நம்பிக்கைகள், சகுனங்கள், சாத்திரங்கள் அவனை ஆட்கொண்டு வருவதைக் காணலாம். மக்கள் அன்றாட வாழ்கையில் மூடநம்பிக்கை நம்பிக்கை காரணமாக சகுனம் பார்த்து வாழ்க்கை நடத்தியதையும், நம்பிக்கைகளின் வழி மக்களின் பண்பாடு, நாகரீகம், உளப்பாங்கு முதலியவற்றையும் நாம் தெள்ளத்தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.